ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 31 யூலை 2024

# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்
## யூன் 2024

2024இன் முதலாவது அரையாண்டில் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றமானது சிறியளவு உயர்வான வர்த்தகப் பற்றாக்குறையொன்றிற்கு மத்தியில் தொழிலாளர் பணவனுப்பல்களிற்கான உயர்ந்தளவிலான உட்பாய்ச்சல்களுடன் நேர்க்கணியமாக தொடர்ந்தும் காணப்பட்டது.

## தொழிலாளர் பணவனுப்பல்கள்

2024 யூன்:
ஐ.அ.டொ 520 மில்



11.4 %
சன-யூன்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்** 2023 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் **2,823** மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் **3,144** மில்லியனிற்கு அதிகரித்தன.

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்




**சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது*

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** 2024 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் **5.7** பில்லியனாக விளங்கியது.

## வணிகப்பொருள் வர்த்தகம்

யூன் 2024
ஏற்றுமதிகள்:
ஐ.அ.டொ 1,077 மில்




இறக்குமதிகள்:
ஐ.அ.டொ 1,447 மில்

சன-யூன் 2024
ஏற்றுமதிகள்:
ஐ.அ.டொ 6,144 மில்




இறக்குமதிகள்:
ஐ.அ.டொ 8,684 மில்

**வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது** (ஆண்டிற்காண்டு) 2024 மேயுடன் ஒப்பிடுகையில் சுருக்கமடைந்தபோதிலும் 2024 யூனில் விரிவடைந்தது காணப்பட்டது.

## சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்

சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் 2023 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் **875** மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் **1,557** மில்லியனாக விளங்கின.

சன-யூன் 2024  1,010,249

சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்

சன-யூன் 2023  624,874

## செலாவணி வீதம்




6.0 %
யூன் இறுதி வரை




**இலங்கை ரூபாவானது** ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 2024 யூன் இறுதி வரையான ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டது.

## பணிகள் துறை உட்பாய்ச்சல்கள்
(சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக)




**பணிகள் துறை** உட்பாய்ச்சல்கள் (சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக) 2023 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் **1,561** மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் **1,762** மில்லியனாக விளங்கின.

## அரச பிணையங்கள் சந்தை (தேறிய)

அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான **வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள்** 2024 யூனில் தொடர்ந்தன.

தேறிய: ஐ.அ.டொ -39 மில்




யூன் 2024

உட்பாய்ச்சல்கள்:
ஐ.அ.டொ 10 மில்

வெளிப்பாய்ச்சல்கள்:
ஐ.அ.டொ 48 மில்

தேறிய: ஐ.அ.டொ -198 மில்




சன-யூன் 2024

உட்பாய்ச்சல்கள்:
ஐ.அ.டொ 213 மில்

வெளிப்பாய்ச்சல்கள்:
ஐ.அ.டொ 411 மில்

## கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை (தேறிய)

தேறிய: ஐ.அ.டொ -3 மில்




யூன் 2024

தேறிய: ஐ.அ.டொ 20 மில்




சன-யூன் 2024

**கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள்** 2024 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## வணிகப்பொருள் வர்த்தக மீதி

2024இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2023இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,289 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,540 மில்லியனிற்கு விரிவடைந்து காணப்பட்டது. அதேவேளை, வர்த்தகப் பற்றாக்குறையானது 2024 யூனில் ஐ.அ.டொலர் 370 மில்லியனிற்குச் சிறிதளவு விரிவடைந்தது.

**வரைபடம் 1: மாதாந்த ஏற்றுமதி வருவாய்கள்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த இறக்குமதிச் செலவினம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றும்[1]

**2024இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதி வருவாய்கள் கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீதத்தினால் அதிகரித்து, ஐ.அ.டொலர் 6,144 மில்லியனை எட்டின.** இவ்வதிகரிப்பானது ஏனையவற்றிற்கிடையில், பெற்றோலிய உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இறப்பர் உற்பத்திகள் மற்றும் தேயிலை என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்தளவிலான வருவாய்களினால் முதன்மையாக உந்தப்பட்டது. அதேவேளை, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,005 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் ஐ.அ.டொலர் 1,077 மில்லியனிற்கு 7.1 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதிகளின் சகல முக்கிய வகைகளினதும் வருவாய்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் இதில் கைத்தொழில் ஏற்றுமதிகள் மிகவும் அதிகரித்துக் காணப்பட்டன.

2024 யூனில் (ஆண்டிற்காண்டு) **கைத்தொழில் பொருட்கள்** ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருள் ஏற்றுமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளினால் முக்கியமாகப் பங்களிக்கப்பட்டன. வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக, மிளகின் உயர்ந்தளவிலான அளவுகள்) மற்றும் தேயிலை (உயர்ந்தளவிலான விலைகளினால் உந்தப்பட்டு) என்பவற்றின் உயர்ந்தளவிலான ஏற்றுமதிகளினால் முக்கியமாக உந்தப்பட்டு **வேளாண்மைப் பொருட்களின்** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2024 யூனில் மேம்பட்டன. **கனிப்பொருள்** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2024 மேயில் அதிகரித்தன.

---

[1] இலங்கை மத்திய வங்கியின் வணிகப்பொருள் வர்த்தகத்தின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II, இணைப்பு III, இணைப்பு IV மற்றும் இணைப்பு V இல் காட்டப்பட்டுள்ளன.

### வரைபடம் 3: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

**2024 யூன்: ஐ.அ.டொலர் 1,077 மில்**

2023 யூன்: ஐ.அ.டொலர் 1,005 மில்




**2024 சன-யூன்: ஐ.அ.டொலர் 6,144 மில்**

2023 சன-யூன்: ஐ.அ.டொலர் 5,871 மில்




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[1]

**2024இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் வணிகப்பொருள் இறக்குமதிச் செலவினமானது கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியிலும் பார்க்க 6.4 சதவீதத்தினால் அதிகரித்து, ஐ.அ.டொலர் 8,684 மில்லியனாக விளங்கியது.** ஏனையவற்றிற்கிடையில், பொறி மற்றும் சாதனங்கள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், இரசாயன உற்பத்திகள் மற்றும் கட்டடவாக்கப் பொருட்கள் என்பவற்றின் உயர்ந்தளவிலான இறக்குமதிகள் இவ்வதிகரிப்பிற்கு முக்கிய காரணமாயமைந்தன. அதேவேளை, இறக்குமதிகள் மீதான செலவினம் 2023 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,369 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் ஐ.அ.டொலர் 1,447 மில்லியனிற்கு 5.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் செலவினம் இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தவேளையில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டது.

### வரைபடம் 4: இறக்குமதிகளின் உள்ளடக்கம்

**2024 யூன்: ஐ.அ.டொலர் 1,447 மில்**

2023 யூன்: ஐ.அ.டொலர் 1,369 மில்




**2024 சன-யூன்: ஐ.அ.டொலர் 8,684 மில்**

2023 சன-யூன்: ஐ.அ.டொலர் 8,161 மில்




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் **நுகர்வுப் பொருட்கள்** மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது உணவு மற்றும் குடிபானங்கள் (தாழ்ந்தளவிலான கோதுமை மா மற்றும் சமையல்சார் எண்ணெய் இறக்குமதிகளினால் உந்தப்பட்டு) மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் (முக்கியமாக, மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள்) ஆகிய இரண்டின் மீதான தாழ்ந்தளவிலான செலவினத்தால் தோற்றுவிக்கப்பட்டது. அதேவேளையில், 2023 யூனுடன் ஒப்பிடுகையில் உயர்ந்தளவிலான எரிபொருள் மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் இறக்குமதிகளின் முதன்மைக் காரணமாக **இடைநிலைப் பொருட்கள்** மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. இருப்பினும், அடிப்படை உலோகங்கள் மற்றும் கோதுமை என்பன மீதான செலவினம் 2024 யூனில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. பொறி மற்றும் சாதனங்களின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளினால் முதன்மையாக உந்தப்பட்டு முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் பரந்த அடிப்படையிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்[2]

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற **வர்த்தக மாற்று விகிதமானது** 2023இன் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2024இன் முதலாவது அரையாண்டில் 0.9 சதவீதத்தினால் சிறியளவு மேம்பட்டுக் காணப்பட்டது. இருப்பினும், வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2023 யூனுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 10.8 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது 2023 யூனுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது உயர்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளுக்குப் பங்களித்திருக்கக்கூடுமென்பதனைச் சுட்டிக்காட்டியது.

அதேபோன்று, இறக்குமதி அளவுச் சுட்டெண் 6.5 சதவீதத்தினால் மேம்பட்டவேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 0.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது 2023 யூனுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் விலைத் தாக்கத்தினால் உந்தப்பட்டமையினைச் சுட்டிக்காட்டியது.

**வரைபடம் 5: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

[2] ஐ.அ.டொலர் நியதிகளில்

## பணிகள் துறைச் செயலாற்றம்[3]

**சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்:** சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2023இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 875 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,557 மில்லியனாக விளங்கின. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2024 மேயில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 154 மில்லியனுடனும் 2023 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 123 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2024 யூனில் ஐ.அ.டொலர் 151 மில்லியனாக மதிப்பிடப்பட்டன.

**வரைபடம் 8: சுற்றுலாத்துறையிலிருந்தான மாதாந்த வருவாய்கள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**ஏனைய பணிகள் துறை உட்பாய்ச்சல்கள்[4]:** பணிகள் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள், சுற்றுலாத்துறை வருவாய்கள் நீங்கலாக, 2023இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,561 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,762 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. கடல் போக்குவரத்து மற்றும் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் 2024இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் சுற்றுலாத்துறை நீங்கலாக பணிகள் துறைக்கான உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய பங்காளர்களாகக் காணப்பட்டன. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக பணிகள் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் 2023 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 247 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் ஐ.அ.டொலர் 285 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. கடல் போக்குவரத்துத் துறைக்கான பணிகள் உட்பாய்ச்சல்கள் 2024 யூனில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக பணிகள் துறைக்கான உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய பங்காளர்களாகக் காணப்பட்டன.

[3] இலங்கை மத்திய வங்கி அதன் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அடிப்படையிலமைந்த மிகவும் விரிவான மாதாந்த பணிகள் துறைப் புள்ளிவிபரங்களை 2024 சனவரியிலிருந்து அறிக்கையிட ஆரம்பித்தது.
[4] தற்காலிகமானது

**வரைபடம் 10: முக்கிய பணிகள் துறை உட்பாய்ச்சல்கள் (சுற்றுலாத் துறை வருவாய்கள் நீங்கலாக)**

**2024 யூன்: ஐ.அ.டொலர் 285 மில்** — **2024 சன-யூன்: ஐ.அ.டொலர் 1,762 மில்**

2023 யூன்: ஐ.அ.டொலர் 247 மில் — 2023 சன-யூன்: ஐ.அ.டொலர் 1,561 மில்




**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை - இலங்கை மத்திய வங்கி

**பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள்**[4]**:** மொத்த பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள் 2023இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 987 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,505 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. வெளிநாட்டுப் பயணம், கடல் போக்குவரத்து, தொழில்நுட்பம், வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள், தயாரிப்புப் பணிகள் மற்றும் கட்டடவாக்கம் உள்ளடங்கலாக பாரிய பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. மொத்த பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள் 2023 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 185 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 யூனில் ஐ.அ.டொலர் 238 மில்லியனாக மதிப்பிடப்பட்டன. 2023 யூனில் பணிகள் துறையிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பாரிய பங்காளர்களாக வெளிநாட்டுப் பயணம் மற்றும் வான் போக்குவரத்து என்பன காணப்பட்டன.

**வரைபடம் 11: முக்கிய பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள்**

**2024 யூன்: ஐ.அ.டொலர் 238 மில்** — **2024 சன-யூன்: ஐ.அ.டொலர் 1,505 மில்**

2023 யூன்: ஐ.அ.டொலர் 185 மில் — 2023 சன-யூன்: ஐ.அ.டொலர் 987 மில்




**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை - இலங்கை மத்திய வங்கி

[4] தற்காலிகமானது

## தொழிலாளர் பணவனுப்பல்கள்

தொழிலாளர் பணவனுப்பல்கள் 2023இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,823 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,144 மில்லியனாக விளங்கிய வேளையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2024 யூனில் தொடர்ச்சியாக நான்காவது மாதமாக ஐ.அ.டொலர் 500 மில்லியனிற்கு மேலாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2024 யூனில் ஐ.அ.டொலர் 520 மில்லியனாக விளங்கின.

**வரைபடம் 12: மாதாந்த தொழிலாளர் பணவனுப்பல்கள்**







**மூலங்கள்:** உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2024 யூனில் ஐ.அ.டொலர் 39 மில்லியன் பெறுமதி கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்து, 2024இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 198 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைத் தோற்றுவித்தன. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர ஆகிய இரண்டு சந்தைக் கொடுக்கல்வாங்கல்களும் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டுப் பாய்ச்சல்கள் 2024 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 20 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தபோதிலும் 2024 யூனில் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. இவ்வொன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சலானது முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 48 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் ஐ.அ.டொலர் 28 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் என்பவற்றின் இணைந்த பெறுபேறொன்றாகக் காணப்பட்டது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிலிருந்து 2024 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனிற்கு அதிகரித்தன. ஒதுக்குகள் பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்குகின்றன. 48 மாத காலம் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான இரண்டாவது மீளாய்வின் நிறைவினைத்தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலமான ஐ.அ.டொலர் 336 மில்லியன் தொகையிலான பெறுகை மே 2024 இறுதியிலிருந்தான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாயமைந்தது. 2024 யூனில் ஐ.அ.டொலர் 57 மில்லியன் தொகை கொண்ட தேறிய நிரம்பல் பதிவுசெய்தபோதிலும் உள்நாட்டு சந்தையிலிருந்து மத்திய வங்கி மூலமான வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவுகள் 2024இன் முதலாவது ஆறு மாத காலப்பகுதியில் 1.8 பில்லியனாக விளங்கின. அதேவேளையில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கமானது (சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக) 2024 யூன் இறுதியிலுள்ளவாறு 3.9 இறக்குமதி மாதங்களாகக் காணப்பட்டது.

**வரைபடம் 13: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமாந்தன்மை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**இலங்கை ரூபாவானது சில இடைக்கிடையேயான தளம்பல்களிற்கு மத்தியில் 2024 யூலை மாத காலப்பகுதியில் பரந்தளவில் நிலையாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.** 2024 யூலை 31 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 7.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2024 யூலை 30 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், சீன யுவான், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் போன்ற ஏனைய முக்கிய நாணயங்களிற்கெதிராக உயர்வடைந்தது. 2024 யூலை வரையான இதுவரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் பெயரளவு உயர்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில், 24 நாணயங்களின் கூடைக்கெதிராக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் (REER 24) உயர்வடைந்துள்ளது. இதற்கமைய, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 2023 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு 70.2 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2024 யூன் இறுதியிலுள்ளவாறு 75.2 சுட்டெண் புள்ளிகளிற்கு அதிகரித்துள்ளமையானது இக்காலப்பகுதியில் வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையில் ஏற்பட்டுள்ள குறைவொன்றினைப் பிரதிபலிக்கின்றது.

**வரைபடம் 14: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 15: வெளிநாட்டு செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு (திசெ 23 இறுதி – யூன் 24 இறுதி)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2022 | 2023 | 2024 (யூலை 31 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -44.8% | +12.1% | +7.1% |
| யூரோ | -41.4% | +7.9% | +9.6% |
| ஸ்ரேலிங் பவுன் | -38.1% | +6.0% | +6.2% |
| சீன யுவான் (ரென்மின்பி) | -39.8% | +14.3% | +9.3% |
| யப்பானிய யென் | -36.4% | +19.5% | +15.8% |
| அவுஸ்திரேலிய டொலர் | -40.8% | +10.8% | +12.9% |
| இந்திய ரூபா | -38.6% | +12.6% | +7.9% |

*தேய்வு(-)/உயர்வு(+)

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

*முன்கூட்டி வெளியிடப்படும் நாட்காட்டியின்படி, 2024 யூலை மாதத்திற்கான வெளிநாட்டுத்துறை ஊடக அறிக்கை வெளியீடு **2024 ஓகத்து 30** அன்று வெளியிடப்படும்.*

**இணைப்பு I:**

**வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)**

| வகை | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,005.3 | 1,077.0 | 7.1 | 5,871.0 | 6,144.4 | 4.7 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,369.1 | 1,446.6 | 5.7 | 8,160.5 | 8,684.4 | 6.4 |
| வர்த்தக மீதி | -363.7 | -369.6 | | -2,289.5 | -2,540.0 | |
| பணிகள் கணக்கு மீதி (தேறிய) | 184.8 | 198.1 | 7.2 | 1,448.5 | 1,813.1 | 25.2 |
| பணிகள் உட்பாய்ச்சல்கள் | 369.5 | 436.2 | 18.0 | 2,435.8 | 3,318.3 | 36.2 |
| *இதில்,* | | | | | | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 122.9 (ஆ) | 151.1 (இ) | 23.0 | 875.0 (ஆ) | 1,556.6 (இ) | 77.9 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் | 69.8 | 68.4 | -2.0 | 384.4 | 394.5 | 2.6 |
| கடல் போக்குவரத்து | 43.0 | 77.6 | 80.2 | 367.9 | 491.5 | 33.6 |
| விமானப் போக்குவரத்து | 56.5 | 54.3 | -4.0 | 369.0 | 334.3 | -9.4 |
| பணிகள் வெளிப்பாய்ச்சல்கள் | 184.7 | 238.0 | 28.9 | 987.3 | 1,505.3 | 52.5 |
| *இதில்,* | | | | | | |
| வெளிநாட்டுப் பயணம் | 14.0 | 54.5 | 288.3 | 64.3 | 403.1 | 526.7 |
| கடல் போக்குவரத்து | 31.7 | 24.2 | -23.6 | 139.4 | 157.3 | 12.8 |
| விமானப் போக்குவரத்து | 30.5 | 40.5 | 33.0 | 233.7 | 226.0 | -3.3 |
| கட்டடவாக்கம் | 9.6 | 20.9 | 117.3 | 56.8 | 64.3 | 13.3 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 475.7 | 519.6 | 9.2 | 2,822.6 | 3,144.0 | 11.4 |
| தனிநபர் பரிமாற்றல் வெளிப்பாய்ச்சல்கள் | 11.3 | 14.1 | 24.3 | 88.6 | 73.9 | -16.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான பாய்ச்சல்கள் (தேறிய) (ஈ) | -0.9 | -2.9 | | 2.4 | 19.9 | |
| அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய பாய்ச்சல்கள் | 68.2 | -38.7 | | 426.0 | -198.1 | |
| திரண்ட நிலுவை | | | | 1,957.6 | 1,761.1 | |
| ***ஞாபகார்த்த விடயங்கள்*** | | | | | | |
| சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை) | 100,388 | 113,470 | | 624,874 | 1,010,249 | |
| வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான புறப்படுகைகள் (எண்ணிக்கை) | 24,080 | 24,119 | | 146,812 | 147,160 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2023இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டின் அடிப்படையிலானது
(இ) 2024இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டின் அடிப்படையிலானது
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது

**இலங்கை மத்திய வங்கி> வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ்> இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
**https://www.cbsl.gov.lk/ta/node/6181**

**இணைப்பு II:**

## இலங்கை மத்திய வங்கியின் வகைப்படுத்தலிற்கமைய ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **790.8** | **830.3** | **5.0** | **4,616.0** | **4,837.2** | **4.8** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 40.3 | 51.7 | 28.2 | 248.9 | 312.6 | 25.6 |
| விலங்குத்தீன் | 15.4 | 10.2 | -33.8 | 84.2 | 70.1 | -16.7 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 430.0 | 447.2 | 4.0 | 2,460.6 | 2,408.1 | -2.1 |
| இதில் ஆடைகள் | 393.4 | 409.1 | 4.0 | 2,236.7 | 2,206.3 | -1.4 |
| புடவைகள் | 27.8 | 29.0 | 4.3 | 172.4 | 146.6 | -15.0 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் | 8.8 | 9.1 | 3.2 | 51.5 | 55.2 | 7.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 72.1 | 80.9 | 12.2 | 432.6 | 487.1 | 12.6 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 52.4 | 29.9 | -43.0 | 268.8 | 212.8 | -20.9 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 52.9 | 40.1 | -24.1 | 317.6 | 247.1 | -22.2 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.3 | 6.3 | -13.5 | 51.6 | 44.0 | -14.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 39.4 | 72.7 | 84.7 | 247.2 | 533.1 | 115.7 |
| இரசாயன உற்பத்திகள் | 15.5 | 19.1 | 23.1 | 95.9 | 110.4 | 15.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 8.7 | 10.9 | 24.5 | 57.9 | 63.4 | 9.5 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 1.8 | 1.8 | -1.7 | 28.2 | 21.1 | -25.2 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 6.3 | 6.6 | 5.9 | 34.1 | 30.5 | -10.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 3.8 | 4.2 | 10.4 | 27.0 | 26.5 | -2.0 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.3 | 17.4 | 30.4 | 85.5 | 93.3 | 9.2 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.9 | 2.6 | -8.4 | 16.3 | 14.3 | -12.3 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 28.6 | 28.7 | 0.1 | 159.7 | 163.0 | 2.1 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **211.3** | **242.0** | **14.5** | **1,229.2** | **1,281.0** | **4.2** |
| தேயிலை | 111.5 | 121.7 | 9.2 | 635.5 | 687.0 | 8.1 |
| இறப்பர் | 1.8 | 1.7 | -2.9 | 17.2 | 11.8 | -31.5 |
| தேங்காய் | 28.5 | 33.0 | 15.9 | 161.0 | 191.2 | 18.7 |
| வாசனைத்திரவியங்கள் | 27.8 | 47.1 | 69.7 | 176.0 | 156.9 | -10.8 |
| காய்கறிகள் | 2.2 | 2.9 | 33.2 | 13.9 | 14.3 | 2.6 |
| பதப்படுத்தப்படாத புகையிலை | 1.9 | 1.6 | -17.3 | 12.9 | 11.3 | -12.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 19.8 | 13.4 | -32.3 | 80.3 | 80.0 | -0.4 |
| கடலுணவு | 17.9 | 20.6 | 14.8 | 132.4 | 128.6 | -2.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **1.1** | **2.2** | **98.2** | **11.9** | **12.4** | **4.1** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **2.1** | **2.5** | **18.0** | **13.9** | **13.8** | **-0.3** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,005.3** | **1,077.0** | **7.1** | **5,871.0** | **6,144.4** | **4.7** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு III:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)

| வகை | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **224.8** | **260.6** | **15.9** | **1,315.2** | **1,397.2** | **6.2** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 21.2 | 25.4 | 19.7 | 151.4 | 152.8 | 1.0 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 6.4 | 5.8 | -9.8 | 34.1 | 36.4 | 6.8 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 37.1 | 40.9 | 10.2 | 193.6 | 228.6 | 18.1 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 138.8 | 167.9 | 20.9 | 810.2 | 845.1 | 4.3 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **11.6** | **12.8** | **9.9** | **79.4** | **81.7** | **2.9** |
| 11 குடிபானங்கள் | 4.7 | 5.6 | 20.0 | 34.1 | 39.1 | 14.8 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 7.0 | 7.2 | 3.2 | 45.3 | 42.6 | -6.1 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **30.9** | **28.5** | **-7.7** | **192.1** | **189.4** | **-1.4** |
| 23 மசகு இறப்பர் | 1.8 | 1.8 | -0.8 | 17.8 | 12.5 | -29.6 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 20.0 | 16.6 | -16.7 | 111.7 | 110.4 | -1.2 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **39.4** | **72.7** | **84.7** | **247.2** | **533.1** | **115.7** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 39.4 | 66.7 | 69.3 | 247.2 | 492.7 | 99.3 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | - | 6.1 | - | - | 40.4 | - |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **5.4** | **7.5** | **39.1** | **31.5** | **38.2** | **21.4** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 5.3 | 7.3 | 38.3 | 31.1 | 36.7 | 18.0 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **20.2** | **23.8** | **18.2** | **117.3** | **132.9** | **13.3** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **162.9** | **153.3** | **-5.9** | **938.2** | **924.6** | **-1.4** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 53.5 | 57.1 | 6.6 | 322.3 | 364.1 | 13.0 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 33.0 | 36.9 | 11.7 | 200.4 | 192.7 | -3.8 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 57.6 | 35.2 | -38.9 | 298.7 | 240.3 | -19.5 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **58.6** | **45.1** | **-22.9** | **359.4** | **284.5** | **-20.8** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 31.9 | 24.4 | -23.4 | 191.2 | 140.5 | -26.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **451.7** | **472.8** | **4.7** | **2,590.6** | **2,562.5** | **-1.1** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 416.3 | 437.0 | 5.0 | 2,367.9 | 2,347.6 | -0.9 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **-** | **-** | **-** | **0.2** | **0.1** | **-5.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,005.3** | **1,077.0** | **7.1** | **5,871.0** | **6,144.4** | **4.7** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

## இலங்கை மத்திய வங்கியின் வகைப்படுத்தலிற்கமைய இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **251.7** | **246.9** | **-1.9** | **1,493.5** | **1,534.2** | **2.7** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 146.8 | 142.7 | -2.8 | 845.5 | 843.6 | -0.2 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 15.5 | 5.3 | -65.5 | 64.6 | 57.9 | -10.4 |
| பால் உற்பத்திகள் | 19.8 | 15.7 | -20.6 | 132.5 | 101.7 | -23.2 |
| காய்கறிகள் (ஆ) | 33.7 | 40.2 | 19.0 | 173.0 | 226.1 | 30.7 |
| கடலுணவு | 6.3 | 13.1 | 107.9 | 25.9 | 61.9 | 139.2 |
| சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் | 30.4 | 33.8 | 11.2 | 250.9 | 160.3 | -36.1 |
| வாசனைத்திரவியங்கள் | 7.1 | 6.1 | -14.4 | 61.3 | 54.8 | -10.7 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 34.0 | 28.4 | -16.3 | 137.3 | 180.8 | 31.7 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 104.9 | 104.2 | -0.7 | 648.0 | 690.7 | 6.6 |
| தனியாள் ஊர்திகள் | 1.4 | 5.8 | 304.3 | 14.0 | 28.7 | 105.4 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 58.0 | 43.2 | -25.5 | 364.4 | 269.3 | -26.1 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 3.9 | 10.9 | 176.5 | 23.7 | 70.8 | 199.0 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 14.1 | 14.7 | 4.2 | 85.3 | 99.0 | 16.0 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 7.7 | 7.2 | -6.4 | 31.3 | 57.4 | 83.6 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 6.7 | 6.9 | 2.7 | 45.2 | 58.0 | 28.3 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 13.0 | 15.5 | 19.1 | 84.1 | 107.4 | 27.8 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **875.4** | **927.4** | **5.9** | **5,446.5** | **5,634.2** | **3.4** |
| எரிபொருள் | 290.0 | 365.4 | 26.0 | 2,354.8 | 2,209.2 | -6.2 |
| இதில் மசகெண்ணெய் | 66.6 | 68.3 | 2.5 | 559.9 | 506.3 | -9.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 223.2 | 297.0 | 33.1 | 1,456.1 | 1,532.5 | 5.3 |
| நிலக்கரி | 0.2 | 0.1 | -25.2 | 338.9 | 170.4 | -49.7 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 25.1 | 22.7 | -9.4 | 135.8 | 128.9 | -5.1 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 194.1 | 233.3 | 20.2 | 1,194.0 | 1,327.5 | 11.2 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 32.0 | 33.8 | 5.5 | 205.4 | 209.1 | 1.8 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 19.1 | 22.8 | 19.1 | 125.8 | 126.2 | 0.4 |
| கோதுமை மற்றும் சோளம் | 41.1 | 11.8 | -71.2 | 188.0 | 134.9 | -28.3 |
| அடிப்படை உலோகங்கள் | 82.2 | 38.6 | -53.0 | 173.3 | 232.5 | 34.1 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 37.0 | 42.2 | 14.1 | 217.0 | 268.2 | 23.6 |
| இரசாயன உற்பத்திகள் | 63.5 | 68.2 | 7.4 | 384.9 | 464.3 | 20.6 |
| வளமாக்கி | 25.3 | 5.5 | -78.1 | 86.9 | 47.4 | -45.4 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 15.1 | 23.7 | 56.4 | 83.6 | 132.7 | 58.8 |
| கனிம உற்பத்திகள் | 4.3 | 9.9 | 130.2 | 32.9 | 58.7 | 78.3 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 46.6 | 49.3 | 6.0 | 264.0 | 294.5 | 11.5 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **239.9** | **272.3** | **13.5** | **1,211.2** | **1,510.9** | **24.7** |
| பொறி மற்றும் கருவிகள் | 163.7 | 187.2 | 14.4 | 822.4 | 1,020.2 | 24.0 |
| கட்டடப் பொருட்கள் | 69.4 | 74.5 | 7.4 | 350.0 | 428.3 | 22.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.6 | 10.4 | 57.6 | 37.4 | 61.3 | 63.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.2 | 0.1 | -35.8 | 1.3 | 1.1 | -15.7 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **2.1** | **0.1** | **-95.6** | **9.4** | **5.0** | **-46.5** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,369.1** | **1,446.6** | **5.7** | **8,160.5** | **8,684.4** | **6.4** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,079.1** | **1,081.2** | **0.2** | **5,805.7** | **6,475.2** | **11.5** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு V:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **191.3** | **167.3** | **-12.5** | **1,119.8** | **1,051.9** | **-6.1** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 20.5 | 15.7 | -23.3 | 134.6 | 107.8 | -19.9 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 6.4 | 13.4 | 109.4 | 26.4 | 62.7 | 137.3 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 56.3 | 16.7 | -70.3 | 252.0 | 191.0 | -24.2 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 36.4 | 44.6 | 22.5 | 194.1 | 260.5 | 34.2 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 30.4 | 33.8 | 11.2 | 250.9 | 160.3 | -36.1 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 10.8 | 11.8 | 9.1 | 82.9 | 83.8 | 1.0 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **8.8** | **13.6** | **55.4** | **57.5** | **55.3** | **-3.9** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **25.8** | **32.3** | **25.3** | **145.9** | **198.0** | **35.7** |
| 23 மசகு இறப்பர் | 12.7 | 20.1 | 58.6 | 62.8 | 109.7 | 74.5 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 1.7 | 0.8 | -49.5 | 21.4 | 7.9 | -63.2 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **290.0** | **365.4** | **26.0** | **2,354.8** | **2,209.2** | **-6.2** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 275.2 | 332.5 | 20.8 | 1,889.2 | 1,867.9 | -1.1 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 14.6 | 32.8 | 125.2 | 126.8 | 170.9 | 34.8 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **25.6** | **15.6** | **-39.0** | **81.9** | **98.4** | **20.3** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 24.7 | 14.4 | -41.6 | 77.2 | 91.5 | 18.5 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **185.5** | **153.3** | **-17.4** | **1,033.1** | **1,026.9** | **-0.6** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 54.5 | 38.3 | -29.6 | 341.6 | 244.6 | -28.4 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 25.3 | 5.5 | -78.1 | 86.8 | 46.9 | -45.9 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 23.4 | 28.0 | 19.6 | 137.1 | 181.3 | 32.2 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 15.2 | 10.2 | -33.0 | 66.3 | 64.8 | -2.2 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **402.4** | **414.5** | **3.0** | **2,092.5** | **2,407.2** | **15.0** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 31.4 | 31.8 | 1.4 | 198.9 | 199.1 | 0.1 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 189.1 | 228.4 | 20.8 | 1,154.0 | 1,298.5 | 12.5 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 40.8 | 41.4 | 1.4 | 236.4 | 262.8 | 11.1 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 94.0 | 57.2 | -39.2 | 218.1 | 311.0 | 42.6 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **180.1** | **223.8** | **24.2** | **921.7** | **1,247.1** | **35.3** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 17.8 | 28.2 | 58.4 | 110.3 | 171.6 | 55.5 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 26.4 | 69.8 | 164.5 | 159.9 | 285.8 | 78.7 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 13.7 | 8.3 | -39.4 | 64.8 | 77.2 | 19.1 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 26.0 | 29.2 | 12.5 | 104.6 | 171.1 | 63.5 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 43.5 | 42.0 | -3.3 | 266.7 | 267.9 | 0.5 |
| 78 வீதி ஊர்திகள் | 11.0 | 16.1 | 46.9 | 68.4 | 95.6 | 39.7 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **58.3** | **60.5** | **3.8** | **345.3** | **387.2** | **12.1** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 11.8 | 11.7 | -0.4 | 75.9 | 86.0 | 13.3 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 11.5 | 11.4 | -0.6 | 69.0 | 70.9 | 2.7 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **1.3** | **0.2** | **-86.3** | **7.9** | **3.2** | **-59.3** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,369.1** | **1,446.6** | **5.7** | **8,160.5** | **8,684.4** | **6.4** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு VI:**

## பணிகள் கணக்கு – உட்பாய்ச்சல்கள் (அ)

| | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **பணிகள்** | **369.5** | **436.2** | **18.0** | **2,435.8** | **3,318.3** | **36.2** |
| **உற்பத்திப் பணிகள்** | **1.1** | **4.4** | **280.5** | **8.9** | **19.9** | **122.9** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள்** | **3.8** | **3.4** | **-9.9** | **20.4** | **28.4** | **39.0** |
| **போக்குவரத்து** | **99.6** | **131.8** | **32.4** | **737.0** | **826.2** | **12.1** |
| கடல் போக்குவரத்து | 43.0 | 77.6 | 80.2 | 367.9 | 491.5 | 33.6 |
| பயணிகள் | 0.01 | 0.04 | 255.4 | 0.1 | 1.0 | |
| கப்பல் கட்டணங்கள் | 21.5 | 42.7 | 99.0 | 185.8 | 293.6 | 58.0 |
| ஏனையவை | 21.6 | 34.8 | 61.5 | 182.0 | 196.8 | 8.1 |
| வானூர்தி போக்குவரத்து | 56.5 | 54.3 | -4.0 | 369.0 | 334.3 | -9.4 |
| பயணிகள் | 27.4 | 19.1 | -30.2 | 155.2 | 141.5 | -8.8 |
| விமான கட்டணங்கள் | 3.9 | 4.5 | 14.3 | 41.2 | 27.1 | -34.2 |
| ஏனையவை | 25.2 | 30.7 | 21.6 | 172.7 | 165.7 | -4.0 |
| தபால் பணிகள் | 0.04 | 0.02 | -52.1 | 0.13 | 0.5 | 270.0 |
| **பயணம்** | **122.9** | **151.1** | **23.0** | **875.0** | **1,556.6** | **77.9** |
| **கட்டடவாக்கம்** | **19.5** | **17.3** | **-11.3** | **122.9** | **117.1** | **-4.7** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 3.6 | 0.6 | -83.9 | 15.4 | 12.6 | -18.2 |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 11.4 | 10.8 | -5.7 | 60.7 | 53.7 | -11.6 |
| கட்டடவாக்க, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 4.4 | 5.9 | 33.5 | 46.8 | 50.8 | 8.7 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **2.8** | **3.0** | **7.9** | **16.4** | **15.1** | **-7.9** |
| நேரடி காப்புறுதி | 2.3 | 3.0 | 30.4 | 15.4 | 12.8 | -17.2 |
| மீள்காப்புறுதி | 0.5 | 0.02 | -95.3 | 1.0 | 2.3 | 139.0 |
| **நிதியியல் பணிகள்** | **3.9** | **7.2** | **82.4** | **31.3** | **37.9** | **20.8** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள்** | **2.0** | **0.6** | **-68.0** | **6.8** | **4.8** | **-29.5** |
| **தொலைத்தொடர்பு, கணனி மற்றும் தகவல் பணிகள்** | **77.3** | **74.2** | **-4.1** | **452.2** | **470.1** | **4.0** |
| தொலைத்தொடர்பு பணிகள் | 7.5 | 5.7 | -23.5 | 67.8 | 75.6 | 11.5 |
| கணனி மற்றும் தகவல் தொழில் நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 69.8 | 68.4 | -2.0 | 384.4 | 394.5 | 2.6 |
| கணனி பணிகள் | 69.3 | 67.8 | -2.2 | 380.3 | 391.6 | 3.0 |
| தகவல் பணிகள் | 0.5 | 0.7 | 37.8 | 4.2 | 3.0 | -29.1 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **33.3** | **35.6** | **7.0** | **144.1** | **218.5** | **51.6** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | 1.0 | 4.8 | 359.1 | 9.1 | 22.5 | 148.6 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 18.7 | 14.0 | -25.4 | 55.0 | 81.3 | 47.8 |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 13.5 | 16.8 | 24.9 | 80.1 | 114.7 | 43.2 |
| **பிரத்தியேக,கலாச்சார மற்றும் களியாட்டப் பொழுது போக்குப் பணிகள்** | **2.6** | **2.7** | **5.8** | **17.2** | **12.5** | **-27.0** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | 0.1 | 1.3 | | 0.8 | 4.1 | 399.5 |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 2.5 | 1.5 | -41.6 | 16.4 | 8.4 | -48.4 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள்** | **0.8** | **4.9** | **490.5** | **3.4** | **11.2** | **228.7** |

அ) தற்காலிகமானது. பயண உட்பாய்ச்சல்கள் நீங்கலாக அனைத்துத் தரவுகளும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமைத் தரவுகளின் அடிப்படையிலமைந்துள்ளன. பயண உட்பாய்ச்சல் தரவுகள் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையிலமைந்துள்ளன.

**மூலங்கள்:** இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு VII:**

## பணிகள் கணக்கு – வெளிப்பாய்ச்சல்கள் (அ)

| | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **பணிகள்** | **184.7** | **238.0** | **28.9** | **987.3** | **1,505.3** | **52.5** |
| **உற்பத்திப் பணிகள்** | **20.0** | **17.3** | **-13.7** | **101.2** | **120.2** | **18.8** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள்** | **0.7** | **2.4** | **263.2** | **2.7** | **6.9** | **153.8** |
| **போக்குவரத்து** | **62.2** | **65.0** | **4.5** | **373.9** | **386.1** | **3.3** |
| கடல் போக்குவரத்து | 31.7 | 24.2 | -23.6 | 139.4 | 157.3 | 12.8 |
| பயணிகள் | 0.2 | 0.1 | -20.9 | 0.9 | 0.4 | -56.0 |
| கப்பல் கட்டணங்கள் | 27.7 | 22.7 | -17.8 | 118.2 | 150.0 | 26.9 |
| ஏனையவை | 3.9 | 1.4 | -65.0 | 20.3 | 6.9 | -66.2 |
| வானூர்தி போக்குவரத்து | 30.5 | 40.5 | 33.0 | 233.7 | 226.0 | -3.3 |
| பயணிகள் | 17.8 | 19.1 | 7.4 | 130.2 | 133.5 | 2.5 |
| விமான கட்டணங்கள் | 4.4 | 8.8 | 97.4 | 44.4 | 34.1 | -23.2 |
| ஏனையவை | 8.3 | 12.7 | 53.5 | 59.1 | 58.4 | -1.2 |
| தபால் பணிகள் | - | 0.2 | | 0.7 | 2.8 | 280.4 |
| **பயணம்** | **14.0** | **54.5** | **288.3** | **64.3** | **403.1** | **526.7** |
| **கட்டடவாக்கம்** | **9.6** | **20.9** | **117.3** | **56.8** | **64.3** | **13.3** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 0.02 | 11.1 | | 1.1 | 20.8 | |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 5.7 | 4.5 | -22.2 | 35.8 | 10.7 | -70.2 |
| கட்டடவாக்க, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 3.8 | 5.3 | 39.0 | 19.8 | 32.8 | 65.5 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **5.2** | **4.1** | **-19.9** | **21.0** | **29.2** | **39.2** |
| நேரடி காப்புறுதி | 2.0 | 0.8 | -59.2 | 4.9 | 6.2 | 26.0 |
| மீள்காப்புறுதி | 3.1 | 3.3 | 5.3 | 16.1 | 23.0 | 43.3 |
| **நிதியியல் பணிகள்** | **3.4** | **1.9** | **-43.6** | **26.0** | **42.7** | **63.9** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள்** | **6.8** | **8.4** | **24.5** | **33.5** | **60.4** | **80.0** |
| **தொலைத்தொடர்பு, கணனி மற்றும் தகவல் பணிகள்** | **30.8** | **23.1** | **-25.0** | **133.0** | **118.8** | **-10.7** |
| தொலைத்தொடர்பு பணிகள் | 8.4 | 10.9 | 29.9 | 22.7 | 28.0 | 23.4 |
| கணனி மற்றும் தகவல் தொழில் நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 22.4 | 12.1 | -45.7 | 110.3 | 90.8 | -17.7 |
| கணனி பணிகள் | 18.9 | 9.9 | -47.5 | 77.5 | 76.1 | -1.8 |
| தகவல் பணிகள் | 3.5 | 2.2 | -36.2 | 32.8 | 14.7 | -55.2 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **30.5** | **39.7** | **30.2** | **163.3** | **264.6** | **62.0** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | 6.0 | 9.8 | 61.8 | 35.9 | 47.4 | 32.0 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 10.1 | 10.7 | 6.3 | 55.6 | 94.5 | 70.1 |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 14.4 | 19.2 | 33.6 | 71.9 | 122.7 | 70.8 |
| **பிரத்தியேக,கலாச்சார மற்றும் களியாட்டப் பொழுது போக்குப் பணிகள்** | **0.4** | **0.4** | **-10.2** | **6.2** | **7.4** | **20.5** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | 0.1 | 0.3 | 89.6 | 3.9 | 7.0 | 79.5 |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 0.3 | 0.1 | -60.7 | 2.3 | 0.4 | -82.2 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள்** | **1.1** | **0.4** | **-67.2** | **5.4** | **1.5** | **-71.4** |

(அ) தற்காலிகமானது

**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு VIII:

### பணிகள் கணக்கு – தேறிய (அ)

| | யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2023 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **பணிகள்** | **184.8** | **198.1** | **7.2** | **1,448.5** | **1,813.1** | **25.2** |
| **உற்பத்திப் பணிகள்** | **-18.9** | **-12.9** | **-31.6** | **-92.2** | **-100.3** | **8.8** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள்** | **3.1** | **1.0** | **-67.3** | **17.7** | **21.5** | **21.4** |
| **போக்குவரத்து** | **37.4** | **66.9** | **78.7** | **363.2** | **440.1** | **21.2** |
| கடல் போக்குவரத்து | 11.3 | 53.3 | 371.5 | 228.5 | 334.2 | 46.2 |
| பயணிகள் | -0.2 | -0.1 | -41.2 | -0.9 | 0.6 | -169.5 |
| கப்பல் கட்டணங்கள் | -6.2 | 20.0 | -421.2 | 67.7 | 143.6 | 112.2 |
| ஏனையவை | 17.7 | 33.4 | 89.1 | 161.7 | 190.0 | 17.5 |
| வானூர்தி போக்குவரத்து | 26.1 | 13.7 | -47.3 | 135.2 | 108.3 | -19.9 |
| பயணிகள் | 9.6 | 0.0 | -99.6 | 25.0 | 8.0 | -67.8 |
| விமான கட்டணங்கள் | -0.52 | -4.3 | 726.8 | -3.2 | -7.0 | 117.9 |
| ஏனையவை | 17.0 | 18.0 | 6.1 | 113.5 | 107.3 | -5.5 |
| **தபால் பணிகள்** | 0.04 | -0.2 | -618.0 | -0.6 | -2.3 | 282.5 |
| **பயணம்** | **108.8** | **96.6** | **-11.3** | **810.7** | **1,153.5** | **42.3** |
| **கட்டடவாக்கம்** | **9.9** | **-3.6** | **-136.6** | **66.1** | **52.9** | **-20.1** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 3.6 | -10.5 | -392.2 | 14.3 | -8.2 | -157.0 |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 5.7 | 6.3 | 10.9 | 24.9 | 43.0 | 73.0 |
| கட்டடவாக்க, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 0.6 | 0.6 | -2.5 | 26.9 | 18.0 | -33.1 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **-2.4** | **-1.1** | **-52.8** | **-4.6** | **-14.1** | |
| நேரடி காப்புறுதி | 0.3 | 2.2 | 680.8 | 10.5 | 6.6 | -37.3 |
| மீள்காப்புறுதி | -2.6 | -3.3 | 24.4 | -15.1 | -20.7 | 37.2 |
| **நிதியியல் பணிகள்** | **0.5** | **5.3** | | **5.3** | **-4.8** | **-190.7** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள்** | **-4.8** | **-7.8** | **62.4** | **-26.8** | **-55.6** | **107.7** |
| **தொலைத்தொடர்பு, கணனி மற்றும் தகவல் பணிகள்** | **46.5** | **51.1** | **9.8** | **319.3** | **351.3** | **10.0** |
| தொலைத்தொடர்பு பணிகள் | -0.9 | -5.2 | 461.6 | 45.1 | 47.6 | 5.5 |
| கணனி மற்றும் தகவல் தொழில் நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 47.4 | 56.3 | 18.7 | 274.1 | 303.7 | 10.8 |
| கணனி பணிகள் | 50.4 | 57.8 | 14.7 | 302.8 | 315.5 | 4.2 |
| தகவல் பணிகள் | -3.0 | -1.6 | -47.9 | -28.6 | -11.7 | -59.0 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **2.7** | **-4.2** | **-252.2** | **-19.2** | **-46.1** | **140.6** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | -5.0 | -5.0 | -0.01 | -26.8 | -24.9 | -7.3 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 8.7 | 3.3 | -62.3 | -0.6 | -13.2 | |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | -0.9 | -2.4 | 160.9 | 8.3 | -8.0 | -197.2 |
| **பிரத்தியேக,கலாச்சார மற்றும் களியாட்டப் பொழுது போக்குப் பணிகள்** | **2.2** | **2.4** | **9.0** | **11.0** | **5.1** | **-53.7** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | -0.04 | 1.0 | | -3.1 | -2.9 | -5.1 |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 2.2 | 1.3 | -39.1 | 14.1 | 8.0 | -43.0 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள்** | **-0.3** | **4.6** | | **-2.0** | **9.6** | **-578.3** |

(அ) தற்காலிகமானது

**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி